# மாவட்ட ஆட்சியர் செய்திக் குறிப்பு

சிவகங்கை மாவட்டத்தில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறைகீழ், செயல்பட்டுவரும் இளைஞர் நீதிக்குழுமத்திற்கு, இளநிலை உதவியாளர் மற்றும் பதிவேடு எழுத்தர்(1) பணியிடம் தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது. அதற்கு கல்வி 10ம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வி பெற்றிருக்கவேண்டும். மாத தொகுப்பூதியமாக ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

அலுவலக உதவியாளர்(1) பணியிடம், தொகுப்பூதியத்தில், ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது. அதற்கு கல்வி தகுதியாக 8ம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வி பெற்றிருக்கவேண்டும். மாத தொகுப்பூதியமாக ரூ.13,000/- (ரூபாய் பதிமூன்றாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

மேற்காணும் பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை, www.sivagangai.nic.in என்ற மாவட்ட இணைய தளத்தில், வேலைவாய்ப்பு பிரிவில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம், அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம். மேற்கண்ட 2 பணியிடங்களுக்கும் வயது வரம்பு 42 ஆகும். பூர்த்திசெய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், அறை எண்.131, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை – 630 562 என்ற முகவரிக்கு 2/10/2026 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
சிவகங்கை.

Scanned with OKEN Scanner